# பொங்கல் திருவிழா 2026

(பாரதிதாசன் கல்லூரி – 13-01-2026)

உயர் கல்வித்துறை இயக்குநர், கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், அன்புக்கு உரிய மாணவக் கண்மணிகள் அனைவருக்கும் வணக்கம். **இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்.**

பொங்கல் திருவிழா தமிழர் பண்பாட்டின் உன்னதமான அடையாளம். விவசாயத்தின் பொருமையை, உழைப்பின் உயர்வை நமக்கு சொல்லும் இந்த திருவிழாவை இன்று உங்களோடு கொண்டாடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால், பொதுவாக பெண்கள் தான் பாரம்பரியத்தின் காவல்களாக இருக்கிறார்கள். பண்பாட்டை அடுத்த தலைமுறைக்கு சொல்லித் தருகிறார்கள்.

இந்த பொங்கல் திருவிழா உங்கள் அனைவரது உள்ளத்தில் நம்பிக்கையும், சிந்தனையில் உயர்வும், வாழ்வில் வளமும் பொங்கச் செய்யட்டும். நான் உங்களிடம் ஒரு வேண்டுகோளை வைக்கிறேன்.

பாரதப் பிரதமரின் லட்சியக் கனவு **VIKSIT BHARAT** 2047. அதாவது சுதந்திரம் அடைந்த 100-வது ஆண்டில் வளர்ச்சி அடைந்த இந்தியா. அந்த இலக்கை நோக்கி நாட்டை வழிநடத்தும் தகுதி படைத்தவர்கள் நீங்கள். உங்களுடைய கல்வியும் திறமையும் இந்த சமுதாயத்ததை உயர்த்த வேண்டும். உங்களுடைய சிந்தனையும் உழைப்பும் இந்த நாட்டின் எதிர்காலத்தை செழிக்க செய்ய வேண்டும். அதற்காக உங்களை தயார் படுத்திக் கொள்ளுங்கள். **நன்றி… வணக்கம். இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்.**